UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# வீதி நாடகங்கள் காட்டும் பெண்ணியப் பகிர்வுகள்

**க. வீரன்** (சுழல் எண் : 222511A007)
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
**முனைவர் ப. நல்லுசாமி**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, விழுப்புரம்

**ஆய்வுச் சுருக்கம்**

காலந்தோறும் இலக்கியங்கள் பல்வேறு பதிவுகளைச் சூழலுக்கு ஏற்ப எடுத்துரைத்துள்ளன. அவற்றில் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இக்கால இலக்கியங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இயல், இசை. நாடகம் என்னும் மூன்று வகைமைக்கும் ஏற்றவகையில் அமைந்துள்ள நாடகக் கலை குறிப்பாக அடித்தட்டு மக்கள் கலை வடிவமாகத் தோற்றம் பெற்று வளர்ந்துள்ளது. அதிலும் வீதியில் நினைத்த உடன், அவசரகாலச் சூழலில் நடத்தப்படும் நாடக வகையான வீதி நாடகங்கள் பல்வேறு விழிப்புணர்வுச் சிந்தனைகளை யும், அரசியல் அறிவிப்புகளையும், சமூக அவலங்களையும் உடனுக்குடன் மக்களிடையே காட்சியாகவும் கருத்தாகவும் விளக்கிக் காட்டும் அழகிய கலை வடிவமாகிறது. அதில் பெண்களின் அடிமைநிலை, பெண்ணியப் பதிவுகள், பெண்கள் விடுதலை அடையத் தடையாக இருக்கும் காரணிகள் ஆகியவற்றை விளக்கும் வகையில் ‘வீதி நாடகங்கள் காட்டும் பெண்ணியப் பகிர்வுகள்’ என்னும் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## Abstract

Throughout history, literature has conveyed various narratives in accordance with the prevailing context. Among these, the contemporary literature that emerged in the twentieth century holds a special place. The art of drama, which encompasses the three categories of literature, music, and dance, has particularly originated and developed as a folk art form of the marginalized people. Street theatre, a type of drama performed spontaneously in public spaces and in emergency situations, serves as a beautiful art form that immediately illustrates various awareness-raising ideas, political messages, and social injustices to the people through visual and conceptual representations. This article, titled 'Feminist Perspectives Presented in Street Plays,' examines the portrayal of women's subjugation, feminist narratives, and the factors hindering women's liberation in these street plays.

**முதன்மைச் சொற்கள்**

நாடகம், வீதி நாடகம், பெண்ணியம், பெண்ணடிமை முறை, ஆணாதிக்க மனநிலை, குடும்ப அமைப்பு, பொருளாதாரச் சூழல், பெண்ணடிமை நிலை, எதிரிப்புணர்வு.

## Keywords

Drama, Street Theatre, Feminism, Patriarchy, Male Chauvinism, Family Structure, Economic Situation, Women's Subjugation, Resistance.

### முன்னுரை

பொதுவாக வரலாறு பற்றிய பார்வை இன்றுவரை போலியானதாகவும், கற்பனை கலந்த பொய்யாகவும் இருந்து வருகிறது. அதிலும் குறிப்பாகப் பெண்களின் வரலாறு பற்றிய பார்வை என்பது, முற்றிலும் அழிந்துபோன போலியான; ஒருதலைப் பட்சமாகத் தணிக்கைச் செய்யப்பட்ட வரலாறாக இருக்கிறது. இதனை உணர்ந்த இருபதாம் நூற்றாண்டு இலக்கிய இயக்கங்கள் அவரவர்களுக்கான வரலாற்றை அவர்களே எழுத வேண்டும் என்ற எண்ணத்தில் எழுந்தன. அதன்கீழ் பெண்களின் வரலாற்றை பெண்களே, எழுதும் முயற்சியில் ஈடுபட்டு, அதில் அவர்கள் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளனர். இந்நிலையில் பெண்களின் வரலாற்றை, உலகம் முன்பு என்றுமே அறிந்திராத வகையில், கீழ்ப்படுத்தப் பட்ட மிகப் பெரிய இனத்தின் வரலாறாக முன்னிருத்த வேண்டிய தேவை, பரவலாக இன்னும் ஆய்வுலகிற்குள் இருந்து வருகிறது. அதனை வலியுறுத்தும் வகையில் இவ்வாய்வுக் கட்டுரை ‘வீதி நாடகங்களில் இடம்பெறும் உரையாடல்களை அடிப்படையாகக் கொண்டு பெண்ணியப் பகிர்வுகளுக்கான விழிப்புணர்வை எடுத்துக்காட்டும் வகையில் அமைக்கப்படுகிறது.

### தற்காலப் பெண்நிலை

தற்காலச் சூழலில் புதிய பெண்ணியச் சிந்தனைகளும், கருத்தியல் சார்ந்த அமைப்புகளும் உருவாகி இருப்பினும், இன்னும் பெண் தொடக்கக் காலத்தில் இருந்த சுதந்திரத் தன்மையை அடையவில்லை. மாறாக பெண்களுக்கு அன்று இருந்த பாலியல் மற்றும் இயற்கை சார்ந்த மாதவிடாய் முதலான உடல் கூறுகளை முன்வைத்தே தற்பொழுதும், அவர்களுக்கான சுதந்திரம் பரிக்கப்பட்டுள்ளது. இத்தன்மைகளை இலக்கிய வடிவத்தில் வேறெந்த இலக்கிய வகைமைக் காட்டிலும் நாடக இலக்கியங்கள் தெளிவாகப் பதிவு செய்துள்ளன. அதிலும் வெகுசன மக்களின் வாழ்வியல் பிரச்சனைகளையும், அரசியல் சாடல்களுக்கு இடையிலான சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள், பெண் குழந்தை வளர்ப்பு, கல்விமுறை முதலான கருத்துக்களையும் வீதிநாடகங்கள் தனித்துவத்துடன் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக மரபு வழிபட்ட அரசியல் சமூக, பொருளாதாரச் சிக்கல்களையும் கட்டமைப்புகளையும் மாற்றியமைப்பதில் அரசியல் இயக்கங்களும் புரட்சிமிக்க பெண்ணிய இயக்கங்களும் பெரும்பங்கு வகிக்கும் இக்காலச் சூழலில், தமிழ்நாட்டின் நிலமை தலைகீழாக இருப்பதைச் சுட்டுக்காட்டும் வகைமைக் குறிப்பிடத்தக்கது. இங்கு ஒருபுறம் பெண் அம்மனாகப் (தெய்வமாக) பார்க்கப்படும் வழக்கமும், அன்பின் ஊற்றாக மதிக்கப்படும் மரபும் இருக்கிறது. மறுபுறம் பலவகைக் காரணங்களுக்காக வந்தேரிகள் தலைமை வகிக்கும் நிலைக்குச்சென்று, அடித்தள மக்கள் பலரும் தங்களின் அடிப்படை உரிமைகளை இழந்த நிலையிக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதில் பெண்களின் நிலை அதைக்காட்டிலும் கீழானதாக இருந்துவருகிறது. இதனை, “**வேத காலத்திலும் தாயபாகத்துப் பெண்டீர் விளக்கப் பட்டுள்ளனர் என்பதை சதபதப் பிராமணத் தாலும், நிருத்தத்தாலும் நம்மால் கண்டறிய முடிகிறது**”[1] இதைத்தொடர்ந்தே தொல்காப்பியக் காலம், சங்க காலம், சங்கம்மருவிய காலம், சிற்றிலக்கியக் காலம், காப்பியக் காலம் என எல்லாக் காலங்களிலும் பெண் அடிமையாகவே நடத்தப்பட்டுள்ளாள். அதற்கேற்ப இச்சமூகமும் பெண்ணுக்கான தனித்த விதிகளை வகுத்து, அடிமை நிலையை கடைபிடித்துள்ளது. மேலும் இங்கு, பெண்ணுக்கான அடிமை - ஆளுகை ஆகிய அனைத்தும் ஆணிடமே இருக்கிறது. இன்னும் பெண்ணுரிமை, அவர்களை அடிமையாக வைத்திருக்கும் ஆண்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ஒன்றாக இருப்பது இதனையே வலியுருத்துவதாக அமைகிறது. எனவே, பெண்ணியச் சிந்தனையாளர்கள், “**பெண்ணினத்தை அடிமைகளாக்கி இருக்கும் ஆணாதிகாரம், வன்முறை என்ற சொல்லின் உள்ளீடாக இயங்கி வருவதைக் குறித்தும் எதிர்த்தும் போராடி வருகின்றனர்.**”[2] அவ்வகையில் ஆண்களின் அதிகாரமானது பெண்களின் உடலையும் மனதையும் தாக்கக்கூடியதாக அமையும் வியூகம் ‘இன்குலாப் நாடகங்கள்’ மூலம் மிகச் சரியாகச் சித்திரிக்கப்பெற்றுள்ளது.

**”சட்டாம் பிள்ளை சொல்றேன்.. பொம்பளைப் புள்ளைகள் கேள்வியே கேட்கக்கூடாது. எதுவும் பேசாதே.. போடுறதைச் சாப்பிட்டுட்டு சொல்றதைக் கேட்டுக்கிட்டு அடங்கிக் கெட...”**[3]

என்றவாறு “ஔவை” நாடகத்தில் ’சிறுமிகளுக்குச் சட்டாம்பிள்ளை சொல்வதாக வரும் உரையாடல்கள்’ காலம்காலமாக பெண்களுக்குச் சொல்லப்பட்டு வரும் அடிமைதன மரபாக்கங்களைச் சுட்டிக் காட்டும் வகையில் அமைந்திருக்கக் காணலாம். அதேபோல பெண்களுக்கு உவமையாகச் சொல்லப்பட்ட கூட்டுக்கிளியின்

ஒப்புமையை இன்குலாப் மிகச் சிறப்பாக இந்நாடகத்தில் கையாண்டுள்ளார்.

**“நீங்கள் ஏதும் பேசக்கூடாது. நாங்க சொல்றத திரும்பச் சொல்லனும். கிளிப்பிள்ளை மாதிரி.**

**ஏன்..?**

**அப்பத்தான் கிளிக்கு பாலும்பழமும் கொடுக்கப்படும்**

**அதுவும் கூண்டுலே வச்சி…**

**ஏன்னா..?**

**கூண்டுதான் கிளிக்குப் பாதுகாப்பு**

**கூண்டு இல்லாட்டா..?**

**பூனை புடிச்சிக்கிட்டுப் போயிடும்..**

**பூனை புடிக்கவந்தா கிளி பறக்காதா..?**

**கூண்டுக்கிளிக்கு இறக்கை வளரவளர வெட்டி விட்டுறுவோம்..?**

**ஏன் வெட்டணும்…?**

**அப்பத்தான் கூண்டுலே கெடக்கும்.**

**கூண்டுலே கெடக்குற கிளியைத்தான் கொஞ்சவும் முடியும்…**

**இல்லியா,,,?**

**இறக்கை வெட்டுன கிளியைத்தான் பூனையும் புடிக்கும் இல்லையா?,,,”**[4]

என்றமைந்த இவ்வுரையாடல் ஆணாதிச்சச் சிந்தனையின் வெளிப்பாட்டை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

**பெண்ணடிமை நிலை**

பெண்ணடிமை நிலையில் ஆண்களின் பங்கே பெரும்பான்மை வகிக்கிறது. ஆணாதிக்கத்தின் பிடியிலேயே முழுமையான பெண் விடுதலைக் கான விதைகள் மறைந்திருக்கின்றன என்பதைச் ‘சக்தி’ நாடத்தின் இடம்பெறும் உரையாடல் மிகச் சிறப்பாக விளக்குகிறது.

**கட்டியக்காரன் : உங்கல் பெயரென்ன..?**

**பெண் : என் பெயர் சரஸ்வதி**

**கட்டியக்காரன் : பெயரை எழுதுங்கள்..?**

**பெண் : எனக்கு எழுதத் தெரியாது. என்னைப் படிக்க வைக்கவில்லை**

**கட்டியக்காரன் : உன் வயது என்ன?**

**பெண் : சரியாகத் தெரியாது**

**கட்டியக்காரன் : என்ன வேலை செய்றீங்க..?**

**பெண்: கூலி வேலை**

**கட்டியக்காரன் : எவ்வளவி சம்பளம்..?**

**பெண் : எனக்கு தெரியாது**

**கட்டியக்காரன் : ஏன்..?**

**பெண் : எங்க அப்பாவுக்குத்தான் தெரியும்**[5]

இவ்வுரையாடல், பெண்ணின் அறியாமையை மட்டுமின்றி, அறியாமைக்குத் தூண்டுவிக்கப் பட்டிருக்கும் அடிமைநிலைக்கான சூழலை விளக்குவதாக அமைந்திருக்கக் காணலாம். அதேபோல, இளஞ்செழியன் எழுதியிருக்கும் **‘கை ஓசை’’** நாடகத்தில் இடம்பெறும் ராதிகா, வடிவு, சசிகலா ஆகியோரின் கலந்துரையாடல் பகுதி மிகமுக்கிய பகுதியாகிறது.

**<u>வடிவு</u> : ஆமாம் ஆமா.. நம்ம சுதந்திரமா பேசிக்க முடியல. பேச அனுமதிக்கிறதில்ல. அப்படி பேசினாலும் பின்னாடி இருந்து பார்த்துகிட்டே இருக்காங்க**

**<u>சசிகலா</u> : அதுமட்டுமா… நாம நம்ம வயதுத் தோழிகள் கூடத்தானே பேச முடியும். அத வுட்டுப்புட்டு பாட்டிமாதிரி வீட்டிலேயே இருன்னா என்ன நியாயம்.?**

**<u>ராதிகா</u> : எந்த புத்தகத்தையும் படிக்க விடுறதில்ல. நம்ம அப்பா அம்மாவும் நமக்கு நல்ல விஷயங்கள சொல்றதில்ல…. நாம யாருகிட்ட போய்த்தான் விஷயங்களத் தெரிஞ்சுக்கிறது..?**

**<u>வடிவு</u> : நம்ம உணர்வுகளை புரிஞ்சுக்காமலேயே பேசுறாங்க. பாதுகாப்புங்கிற பேர்ல அதிகமா கண்டிக்கிறாங்க**

**<u>ராதிகா</u> : வயசுக்கு வந்ததனால படிப்பையும் நிறுத்திட்டாங்க. தொடர்ந்து படிக்கலான்னு ஆசை. ஆனால் மேலும் படிக்க வழியும் தெரியல.**[6]

இவ்வுரையாடலின் வழியே, பெண்களை அடக்கி, ஒடுக்கி வளர்ப்பதால் அவர்கள் அடக்கமானவர் களாக, நல்ல குணம் படைத்தவர்களாக வளர முடியாது, மாறாக ஒன்றும் தெரியாத மடமை களாகத்தான் வளருவார்கள். அதனால் அப்பெண்ணிற்கும் அவளுடைய பெற்றோருக்கும் அவப்பெயரே விளையும் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

கிராமங்களிலும் சில நகரங்களிலும் கூட பெற்றோர்கள் பெண்களை முட்டாள்களாக வளர்க்க விரும்புகிறார்கள். திருமணம் முடித்துச்செல்லும் ஆண் மகனும், பெண்ணை முட்டாளாக வைத்திருக்க விரும்புகிறான். பெண்கள் உடலாலும் அறிவாலும் குழந்தைப்

பருவத்திலிருந்தே மட்டம் தட்டப்படுகின்றனர். இதனை **'டேனிடா திட்டம்'** எழுதிய **'வள்ளியின் வழக்கு'** என்னும் நாடகம் மிகச்சிறப்பாக விவரிக்கிறது. வள்ளி சிறுவயது முதலே படிப்பிலும் அறிவிலும் புத்திசாலியாக இருந்து வருகிறாள். அவள் பருவம் எய்தியவுடன் அவளுடைய அப்பா, அவளது அறிவையும், திறமையையும் முடக்குகிறார்.

**"அடி செருப்பாலே... கழுத இனிமேல பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, அந்தப் போட்டி இந்தப் போட்டின்னு வச்சிக்கிட்டே, மவளே கையகால ஒடிச்சு அடுப்பில வச்சுருவேன். குனிஞ்ச தலை நிமிராம பள்ளி கொடத்துக்குப் போகணும். குனிஞ்ச தலை நிமிராம வீட்டுக்கு வரணும் தெரிஞ்சுதா..!**

**இங்க பார்றீ... ... இவளுக்கு கட்டிக் கொடுக்கிற வயசு ஆயிருச்சி... இந்த வருஷத்தோட பள்ளிக்கூடத்தை விட்டு நிறுத்திடு..."[7]**

என்று படிப்பில் திறமையாக இருந்து, போட்டிகளில் முதலிடம் பெறும் வள்ளி, பருவம் எய்தியதால் தன் சுதந்திரத்தையும், கல்வியையும் இழக்க நேர்கிறது. அதுமட்டுமின்றி,

**வள்ளி : அப்பா எனக்கு ரெண்டு முட்டை வேணும்**

**தந்தை : பொட்டைக்கு எதுக்குலா முட்டை. அதயெடுத்து பையனுக்கு வைய்...[8]** என்று பெண்ணின் ஆரோக்கியத்தைக் கூட முடமாக்க நினைக்கும் ஆணாதிக்க மனநிலை, தந்தைவழிச் சமுகத்திடமிருந்தே கட்டமைக்கப்படுவதை 'டேனிடா திட்டம்' இங்கு அழுத்தமாக குறிப்பிடுகிறார்.

பெண்ணடிமைத் தனத்தின் வேர்வரை ஆணாதிக்கத்தின் மானோபாவம் ஊறி இருக்கிறது. ஆண்களின் மனநிலையில் எழுந்துள்ள சமத்துவ மற்ற போக்கு, தனக்குப் பிறந்த குழந்தையாக இருந்தாலும், அவர்களைப் பெண்ணாகவே பார்த்து, இரண்டாந்தரமாகவே நடத்துகிறது. சமூகமும் பெண்களுக்கு சமஉரிமையைத் தருவதாகயில்லை. மாறாக அவர்களின் இயற்கை வளர்முறையைக் குறைபேசி, அவர்களுக்கான இன்பதுன்பங்களைக்கூட சுதந்திரமாக அனுபவிக்க விடுவதாயில்லை. இதற்கான சிறந்த உதாரணமாக 'வள்ளியின் வழக்கு' நாடத்தில் இடம்பெறும் பஞ்சாயத்து நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம்.

**"வள்ளி மூப்படைந்தப் பின்னர், அவளை குழாயடியில் ஒரு ஆண்மகன் கிண்டல் செய்கிறான். வள்ளியின் கையைப் பிடித்து இழுத்து விளையாடுகிறான். இச்செய்தியை வள்ளி தன் குடும்பத்தாரிடம் தெரிவிக்கிறாள். வள்ளிக்கு நிகழ்ந்த செயல், பெரிய அவமான மாகவும், அசிங்கமாகவும் கருதப்பட்டு, வழக்கு பஞ்சாயத்திற்கு செல்கிறது. அப்பொழுது பஞ்சா யத்தில் வழங்கப்படும் முடிவு பின்வருமாறு, - "ஒரு வாசகம் சொன்னாலும், அது திருவாசகம். இப்ப சொல்றேன் கேட்டுக்கங்க...! வள்ளியின் கையைப் புடிச்சி இழுத்த சிவன்காளை, செஞ்ச தப்புக்கு பரிகாரமா... வள்ளியோட கழுத்துல தாலிகட்டிட வேண்டியது. (ஆண்கள், தீர்ப்பை ஆமோதிக்கின்றனர். பெண்கள் தீர்ப்பை எதிர்த்து கூச்சலிடுகின்றனர். சிவன்காளை மஞ்சள் கயிறு எடுத்துக்கொண்டு வள்ளியை நெருங்குகிறான்)"[9]**

இத்தீர்ப்பில் இருக்கும், ஆணாதிக்க மனோநிலை புரிந்துணரத்தக்கதே. பெண்ணின் மன விருப்பத் தைப் பற்றி கொஞ்சமும் கவலைக்கொள்ளாத சமூகம், அப்பெண் கற்புடனும் புதினத்தன்மையு டன் இருக்கவேண்டும் என்பதில் மட்டும் அக்கறைக் காட்டுகிறது.

சமுதாய வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் மரபுசார்ந்த வாழ்க்கை நெறியாகிய 'கற்பு' பெண் களுக்கு மட்டுமானதாக வலியுறுத்தப் பட்டுகிறது. பெண்ணுக்கான ஒன்றாக 'கற்பு' பார்க்கப்பட்ட சூழலில், அதனை வற்புறுத்துபவர்களாக, ஆண் கள் உருவாகின்றனர். பொதுவாக பெண்களின் வாழ்வில் இக்கோட்பாடுகள் பிறழப்படுவதற்கானச் சூழ்நிலைகளில், அவர்களின் தனிமனித உணர்வு கள், குடும்பம் மற்றும் சமுதாய நிலை ஆகியன கேள்விக்குள்ளாகின்றன. அதனால் பெண்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். இத்தனை நெருக்குதலும் பெண்கள் மீது திணிக்கப்பட்ட 'கற்பு' கோட்பாட்டால் உருவாகிறது. ஆனாலும் ஆண்கள் கற்பின் பாதுகாப்பிற்கு மட்டும் வழிவகைச் செய்பவர்களாக இருப்பதில்லை. இத்தன்மையை கலைவடிவத்தினூடே வீதி நாடகங்கள் விவரிக்கின்றன.

**சிவன்காளை : ஓரப்பார்வை பார்க்கும் இந்த, பாடம் சொன்னது யாரடி.., ஒரேயொரு முறையாவது, நேர நிமிர்ந்து பாரடி, உன் பூமுகமோ – ஆய் வெள்ளி..**

**வள்ளி : செருப்பு பிஞ்சுடும்**

**சிவன்காளை : கோச்சுக்காத வள்ளி. நான் வேணா தண்ணியடிச்சு தரட்டா.**

**வள்ளி : சிவன்காலை நான் போகும்போதும் வரும்போதும் வம்பு பண்ணிகிட்டு திரியறே...**

**இது எங்கப்பனுக்கு தெரிஞ்சது மாறுகால் மாறுகை வாங்கிடும் ஜாக்கிரதை…”**[10]

இவ்வாறு 'வள்ளியின் வழக்கு' நாடகத்தில், வள்ளியை குழாயில் தண்ணியடிக்க விடாமல் ஆண்மகன் ஒருவன் தொடர்ந்து பாலியல் தொல்லை தருகிறான். இக்காட்சியின் இறுதியில்,

**"குறும்பு கிண்டலுன்னு / வன்முறைதான் நடக்குது/ஆணுக்கிது சகஜமுன்னு / சமுதாயம் சொல்லுது"**[11]

என்றவாறு பாடல் இசைக்கப்படுகிறது. உண்மையில் பெண்களிடம் ஆண்கள் செய்யும் பாலியல் சீண்டல்கள் அனைத்தும் சகஜமாகப் பார்க்கப்படும், இச்சமூகத்தில் கற்புக்கு காவலாளியாக மட்டும் ஏன் ஆண்களை முன்னிருத்தாமல், பெண்களைக் முன்னிருத்தவேண்டும் என்ற கேள்வி எழுகிறது. அதேபோல, 'சுமைதாங்கி' நாடகத்தில் இடம்பெறும் சரசுக்கும் மாரிக்குமான சண்டைக்காட்சி ஆணாதிக்கத்தின் வெளிப்பாட்டை படம் பிடித்துக்காட்டும் வகையில் அமைந்திருக்கிறது.

**<u>சரசு</u> : நீ மட்டும் என்னவாம்… பசங்களோட சேர்ந்து ஊர் சுத்துற… எந்த வேலையாவது ஒழுங்கா பாக்குறியா… நீயுந்தான் திங்கிற… தூங்குற…**

**<u>மாரி</u> : நான் ஆம்பளடி… நாலு பக்கம் போவேன். ஏன் நீயும் சுத்தப் போறேன்றியா… ஓடுகாலி நாயி…**

**<u>சரசு</u> : எல்லாம் நீதான்… நான் இல்ல….**

**<u>மாரி</u> : என்னடி சொல்லிக்கிட்டே இருக்கேன் எதுத்துப் பேசிக்கிட்டே இருக்க…(அடிக்க வருகிறான். சரசு தடுமாறி விழுகிறாள்) கையைப் பிடித்து திருகுகிறான். ஒழுங்கா இருக்கிறதுனா இரு… இல்லாட்டி ஓடிப்போயிரு.. (அடிக்கிறான். காலால் மிதிக்கிறான்)**[12]

இப்பதிவின் வழியாக சமத்துவமில்லாமல் குடும்ப அமைப்புக்குள் பெண்கள் தினம்தினம், ஆணாதிக்கத்தின் பிடியில் அடியும் உதையும் வாங்கிக்கொண்டு, கற்பையும் குடும்பச் சுமையையும் காத்துக் கொண்டு, வாழும் வாழ்க்கை முறையை வீதி நாடகங்கள் விமர்சிக்கின்றன. ஆணுக்கும் பெண்ணும் சமஉரிமையும் சுதந்திரமும் இருக்கும் சூழலில், ஆணாதிக்கத்தின் செயல்பாடுகளான பாலியல் சீண்டல்களையும், தாக்குதல்களையும் எதிர்த்து வீதிநாடகங்கள் குரல் கொடுக்கின்றன. தேவையான இடங்களில் எதிர்வினைகளையும் வெளிப்படுத்தி பெண் விடுதலைக்கான தேவையை வலியுறுத்துகின்றன.

## முடிவுரை

பெண்களைப் பற்றி இதுவரை வெளிவந்துள்ள எழுதப்படாத ஆவணங்களும்; காப்பியங்கள், வரலாறுகள், மனித இனவரலாற்று ஆய்வுகள், தொல்பொருள் ஆய்வுச்சான்றுகளும் பல்வேறு வகையில் பெண்ணடிமை நிலைகளைச் சுட்டிக் காட்டியுள்ளன. அவற்றுடன் வீதிநாடகம் என்னும் மக்கள் கலை இலக்கியமும் கைக்கோர்க்கிறது. அதன்கீழ் வீதிநாடகப் பிரதிகளில் பெண்ணியத் திற்கானப் பிரதிகள் என்றே தனித்துக் குறிப்பிடும் அளவில் பெண் விடுதலைக்காகவும், பெண்ணியத்திற்காகவும் பல்வேறு விழிப்புணர்வு மற்றும் பிரச்சாரத் தன்மையிலான செயலாக்கங்களில் முழுவீச்சுடன் ஈடுபட்டுள்ளன. அதிலும் குறிப்பாக அடித்தட்டு மக்களுக்கானப் பிரச்சனைகளையும் பெண்கள், தலித்துக்கள் உள்ளிட்ட புறந்தள்ளப்பட்ட மனிதர்களுக்கான பிரச்சனைகளையும் பேசுவதில் வீதிநாடகங்கள் முதலிடம் பெறுகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. வி.ராதாகிருஷ்ணன்., (த.ஆ)., உலக வரலாற்றில் பெண்கள்., பக்.35-36
2. இன்குலாப்., (ஔவை நாடகம்)., இன்குலாப் நாடகங்கள்., ப.24
3. மேலது., ப.24-25
4. பூ.குமரகுருதாசன்., சக்தி (வீதி நாடகம்)., விழிப்புணர்வு வீதிநாடகங்கள்., பக்.23-24
5. டேனிடா திட்டம்., வள்ளியின் வழக்கு., (வீதி நாடகம்)., மேலது., ப.130
6. மேலது., ப.132
7. மேலது., ப.138
8. டேனிடா திட்டம்., நல்ல முடிவு., (வீதி நாடகம்)., மேலது., ப.151
9. மேலது., ப.155
10. அழகு பாரதி., சுமைத்தாங்கி (வீதி நாடகம்)., மேலது., ப.99
11. பாரதிதாசன்., பாரதிதாசன் கவிதைகள்., பெண் குழந்தைத் தாலாட்டு – 8., ப.42
12. மு.ராமசாமி.,வாரிசு (வீதி நாடகம்) ., மேலது., ப.17